தில்லி போராட்ட மாணவர்கள் மீது பிளாஸ்டிக் குண்டுகளால் சுட்ட போலீஸார்

காவல் நிலைய பதிவேட்டில் தகவல்

புது தில்லி, ஜூலை 28: நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளைக் கண்டித்து கடந்த 20-ஆம் தேதி நாடாளுமன்றத்தை நோக்கிய பேரணியை நடத்திய மாணவர்கள் மீது தில்லி காவல் துறையின் அதிரடிப் படையினர் (ஆர்ஏஎஃப்) பிளாஸ்டிக் குண்டுகள் உள்பட உயிரிழப்பை ஏற்படுத்தாத குண்டுகளால் சுட்டது தற்போது தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக தில்லி நாடாளுமன்ற சாலை காவல் நிலையத்தில் ஆர்ஏஎஃப் படை அதிகாரி அளித்த தகவலின் அடிப்படையில், ஜூலை 22-ஆம் தேதி பிற்பகல் 1.24 மணிக்கு பதிவு செய்யப்பட்ட பொது நாட்குறிப்பு பதிவை சுட்டிக்காட்டி அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை இத் தகவலைத் தெரிவித்தனர்.

நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளைக் கண்டித்தும்,மத்திய கல்வி அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் தில்லியில் அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீஸார் ரப்பர் குண்டுகளால் சுட்டதாக புகார்கள் எழுந்தன.

ஆனால், இந்த குற்றச்சாட்டுகளை தில்லி காவல் துறை மறுத்தது. போராட்ட மாணவர்கள் மீது ரப்பர் குண்டுகளால் சுட்டதாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் தவறானவை என்று தில்லி காவல்துறை தெரிவித்தது. ஆனால், இந்த போராட்ட பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படை (சிஆர்பிஎஃப்) மற்றும் ஆர்ஏஎஃப் ஆகியவை இதுகுறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், போராட்ட மாணவர்கள் மீது போலீஸார் பிளாஸ்டிக் குண்டுகளால் சுட்டது தில்லி நாடாளுமன்ற சாலை காவல் நிலைய பதிவு மூலம் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதுகுறித்து காவல்நிலைய பதிவை சுட்டிக்காட்டி அதிகாரிகள் கூறியதாவது:

கடந்த ஜூலை 20-ஆம் தேதி மாணவர்கள் போராட்டத்தின் போது ஜந்தர் மந்தர் மண்டல்-1 பகுதியில் நீல நிற சீருடை அணிந்த தில்லி காவல் துறையின் அதிரடிப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தில்லி காவல் துறையின் துணை காவல் கண்காணிப்பாளர் அந்தஸ்திலான அதிகாரியின் உத்தரவின் பேரில், போராட்ட மாணவர்கள் மீது மின்சார தொடர்பற்ற 55 குண்டுகள், மின்சாரத் தொடர்புடைய 15 குண்டுகள், 5 கண்ணீர் புகைக் குண்டுகள், கலவரத் தடுப்பு துப்பாக்கிகளிலிருந்து இரண்டு சுற்றுகளும், பிளாஸ்டிக் குண்டுகள் இரு சுற்றுகளும் சுடப்பட்டன என்று காவல்நிலைய பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரம், தில்லியின் மற்ற பகுதிகளில் நடைபெற்ற நீட் போராட்டங்களில் அதிரடிப் படையினர் இதேபோன்று பிளாஸ்டிக் குண்டுகளால் சுட்டனரா என்ற விவரம் தெரியவரவில்லை.

ஒரு பிளாஸ்டிக் குண்டு சுற்றில் 4 துண்டுகள் இருக்கும். இவை, உடலைத் துளைக்கக் கூடிய உலோக குண்டுகளிலிருந்து மாறுபட்டவை. இந்த பிளாஸ்டிக் குண்டுகள் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உச்சநீதிமன்ற உத்தரவு எதிரொலி

வழக்குப் பதிவை திரும்பப் பெறவில்லை என்றால் புதிய போராட்டம்: சிஜேபி எச்சரிக்கை

புது தில்லி, ஜூலை 28: உச்சநீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை பயன்படுத்தி போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது பதியப்பட்ட வழக்குகளை மத்திய அரசு திரும்பப் பெறவில்லை என்றால் புதிய போராட்டம் நடத்தப்படுமென கரப்பான்பூச்சி ஜனதா கட்சி (சிஜேபி) செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்தது.

போராட்டக்காரர்களுக்கு எதிரான காவல் துறை நடவடிக்கைகள் தொடர்பாக தாக்கலான மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதில்,'நீட் தேர்வுக்கு எதிராக நாடு முழுவதும் பங்கேற்ற 18 வயதுக்குக் கீழுள்ள சிறார்களை விடுவிக்க வேண்டும். மற்ற போராட்டக்காரர்கள் மீது விசாரணை நிறைவடையும் வரை கடும் நடவடிக்கை எடுக்கக் கூடாது. குற்றப் பின்னணியைக் கொண்ட போராட்டக்காரர்களுக்கு இந்தப் பாதுகாப்பு பொருந்தாது' என குறிப்பிட்டது.

மத்திய அரசு அளித்த உத்தரவாதங்களுக்கு முரணாக உச்சநீதிமன்ற உத்தரவு உள்ளதாகத் தெரிவித்த சிஜேபி செய்தித் தொடர்பாளர் சௌரவ் தாஸ் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட எந்தவொரு மாணவர் மீதும் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என மத்திய அரசு அளித்த உத்தரவாதத்தை ஏற்றே போராட்டத்தை கைவிட சிஜேபி ஜூலை 25-ஆம் தேதி ஒப்புக்கொண்டது.

ஆனால் தற்போது உச்சநீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவு அதற்கு எதிர்மறையாக உள்ளது. இதைப் பயன்படுத்தி சில போராட்டக்காரர்கள் மீது மத்திய அரசும் பாஜக ஆளும் மாநிலங்களும் நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

மத்திய அரசுகளுக்கு அளித்த உத்தரவாதம் செவ்வாய்க்கிழமையுடன் காலாவதியானது. எனவே, உச்சநீதிமன்றத்தின் அடுத்தகட்ட விசாரணையில் மத்திய அரசு அளித்த உத்தரவாதங்களை சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் புதிய போராட்டத்தை சிஜேபி முன்னெடுக்கும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் அடுத்த கட்ட விசாரணை ஆகஸ்ட் 3-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

தாக்கலாகும் மசோதாக்கள்: தே.ஜ. கூட்டணி ஆலோசனை

முதல் முறையாக என்சிபிஐ பங்கேற்பு

புது தில்லி, ஜூலை 28: நடப்பு நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் எதிர்வரும் நாள்களில் தாக்கலாகும் மசோதாக்கள் தொடர்பாக, தில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது. ஆளும்தரப்பின் வியூகம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறும் 'மங்கள் மிலன்' தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்கள் கூட்டத்தில் முதல் முறையாக இந்திய தேசியவாத குடிமக்கள் கட்சியின் (என்சிபிஐ) 20 எம்.பி.க்கள் பங்கேற்றனர்.

அண்மையில் திரிணமூல் காங்கிரஸில் இருந்து தனி அணியாக பிரிந்த இந்த எம்.பி.க்கள், அதிகம் அறியப்படாத என்சிபிஐ-யில் இணைந்ததுடன், பாஜக கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருந்தனர்.

20 எம்.பி.க்களும் என்சிபிஐ-யில் இணைந்ததை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா இன்னும் அங்கீகரிக்காத நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்கள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

நடப்பு மழைக்கால கூட்டத் தொடரையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் மோடி தலைமையில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்களின் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா, ஜெ.பி.நட்டா, நிதின் கட்கரி, பியூஷ் கோயல், கிரண் ரிஜிஜு மற்றும் கூட்டணி எம்.பி.க்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில், என்சிபிஐ எம்.பி.க்களும் முதல் முறையாக பங்கேற்றனர்.

இது தொடர்பாக என்சிபிஐ எம்.பி.க்களான சகோலி கோஷ் தஸ்திதார், சதாப்திராய், சயோனி கோஷ் ஆகியோர் கூறுகையில், 'நாடாளுமன்ற கூட்டத் தொடரின்போது ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பி.க்களின் கூட்டத்துக்கு முதல் முறையாக என்சிபிஐ அழைக்கப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சி, தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள், விவசாயிகளுக்கான பலன் என அனைத்து விஷயங்கள் குறித்தும் கூட்டத்தின் வாயிலாக அறிந்துகொண்டோம். நடப்பு கூட்டத் தொடரில் தாக்கலாகவிருக்கும் பல்வேறு மசோதாக்கள் குறித்து எங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேற்கண்ட விவகாரங்களில் எங்களுக்கு கிடைத்த தரவுகளைக் கொண்டு, மக்களுக்கு விளக்கமளிப்போம். மத்திய அரசு கொண்டு வந்துள்ள தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத் திருத்த மசோதாவுக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்' என்றனர்.

பிரதமர் மோடியின் ஃபேஸ்புக் பதிவு நீக்கம்: மன்னிப்புக் கேட்டது மெட்டா

புது தில்லி, ஜூலை 28: ஃபேஸ்புக் தளத்தில் இருந்து பிரதமர் நரேந்திர மோடியின் பதிவு நீக்கப்பட்டது தொழில்நுட்பப் பிரச்னையால் நிகழ்ந்தது என விளக்கமளித்துள்ள மெட்டா நிறுவனம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

முன்னதாக, நீட் தேர்வு வினாத்தாள் கசிவு பிரச்னையை முன்வைத்து தில்லியில் மாணவர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், பிரதமர் மோடி கடந்த 23-ஆம் தேதி இரவு தனது இன்ஸ்டாகிராம் மற்றும் ஃபேஸ்புக் பக்கத்தில் ஒரு விடியோ பதிவு வெளியிட்டார். அப்போது, வினாத்தாள் கசிவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள் குறித்து அவர் அதில் விளக்கமளித்தார்.

இன்ஸ்டாகிராமில் அப்பதிவை சில மணி நேரத்திலேயே லட்சக்கணக்கானோர் பார்த்து பகிர்ந்த நிலையில், ஃபேஸ்புக்கில் இருந்து அப்பதிவு நீக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்களை அணுகும் நோக்கில் பிரதமர் வெளியிட்ட இந்த விடியோ நீக்கப்பட்டது ஃபேஸ்புக் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக விளக்கம் கேட்டு மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் சார்பில் ஃபேஸ்புக்கின் தலைமை நிறுவனமான மெட்டாவின் சர்வதேச தலைவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இதையடுத்து, மெட்டா நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் 'எக்ஸ்' தளத்தில் அளித்த விளக்கத்தில், 'பதிவேற்றம் செய்யப்படும் விடியோக்களை தானியங்கி முறையில் கட்டுப்படுத்தும் அமைப்பு உள்ளது. அதில் ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்னையால் குறிப்பிட்ட விடியோ பதிவு நீக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த விடியோ மீண்டும் வெளியிடப்பட்டுவிட்டது' என்று கூறியுள்ளது. இது தவிர அரசுத் தரப்பிடம் மெட்டா நிறுவனம் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

அதே நேரத்தில் இந்த விஷயத்தை மத்திய அரசு மிகவும் தீவிரமாக கருத்தில் கொண்டுள்ளது. ஏற்கெனவே, சமூக ஊடங்களின் செயல்பாடுகள் முக்கியமாக இந்தியாவில் அதன் செயல்பாடுகள், கொள்கைகள் குறித்து பல்வேறு புகார்கள் அரசுக்கு வந்த வண்ணம் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

INDEL MONEY

Corporate office: Indel Money Limited
IIIrd Floor Indel House, Changampuzha Nagar, South Kalamassery, Ernakulum -682033
PH: 0484-2933999 E:customercare@indelmoney.com

GOLD AUCTION NOTICE

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 27-08-2026 தேதி காலை 11:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறோம். நகை கடன் பெற்றதும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

மேடவாக்கம் - 16404800008631, 0480/08647, பூந்தமல்லி - 19904790004088, சின்மயா நகர் -19804790005592, 19804800005593, 0480/05594, 0480/05622, 0480/05639, சாலிகிராமம் - 35104790001042,

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in மற்றும் e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net வழியாக 29-08-2026 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 29-08-2026 தேதி அன்று ஈ-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.

இன்டல்மணி லிமிடெட்,
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

CUB TRUST AND CONFIDENCE SINCE 1904

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-அ, காந்தி நகர், கும்பகோணம் - 612001 மின்னஞ்சல்: cmd@cityunionbank.bank.in, போன்: 0435-2432322, கம்பேக்ஸ்: 0435-2431746

அசையா சொத்து ஏல விற்பனை அறிவிப்பு

பத்திரப்படுத்துதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI Act, 2002) மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 9(1) & 9(1)-ன் கீழ் அசையா சொத்துக்களை மின் ஏலம் விடுவதற்கான விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்கள், ஜாமீன்தாரர்கள் மற்றும் கடமைதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது என்னவெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநரும் அடமானம் அல்லது பொறுப்பாக்கப்படுத்தப்பட்டுள்ளது அதாவது ஆக்கப்பூர்வமான கையகுளம் (Constructive Possession) சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் அதிகாரப்பூர்வ அதிகாரியால் பெறப்பட்டுள்ளது. சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் பத்திரப்படுத்தப்பட்ட கடன் வழங்குநரும்-க்கு செலுத்த வேண்டிய தொகையான ரூ.27,32,470/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நானூற்று எழுபது மட்டும்) 20-07-2026 அன்றைய தேதியிலான நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் "உள்ளது உள்ளபடி", "எப்படி உள்ளதோ அப்படி", "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 05-09-2026 அன்று ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

கடன்தாரர்கள் விபரம் : M/s. V.S. எண்டர்பிரைசஸ், இதன் பிரதிநிதியாக உரிமையாளர் திருமதி.உமபிதா, எண்.4, தரை தளம், முருகேசன் தெரு, திருமுருகன் நகர், சீர்காழிபாக்கம், சென்னை - 600064. 2.திருமதி. பவிதா, க/பெ.M. பாபு, எண்.10/17, அண்ணாமலை தெரு, காந்தி நகர், கிழக்கு தாம்பரம், சென்னை - 600059. 3.திரு.M.பாபு, த/பெ.கோவிந்தராஜ், எண்.10/17, அண்ணாமலை தெரு, காந்தி நகர், கிழக்கு தாம்பரம், சென்னை - 600059. 4.திரு.A.கேசவன், த/பெ.அல்லிராஜ்பிரசன்ன, எண்.35, பாரதிதாசன் தெரு, கிண்டிபாக்கம், ஜாபர்பாக்கம் - 603210.

திரண்டிக்கப்பட்ட விலை, செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்பு தொகை மற்றும் இதர விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

செலுத்த வேண்டிய பிணை வைப்பு தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி & நேரம்	08.09.2026, மாலை 04:00 மணி
மின் ஏல விற்பனையின் தேதி மற்றும் நேரம்	09.09.2026, நேரம்: மதியம் 12:00 மணி முதல் 01:00 மணி வரை
முன் வைப்பு தொகை, ஏலம் பதவி சமர்பிக்கும் இடம் மற்றும் தொடர்பு விவரங்கள்	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், சென்னை கிழக்கு தாம்பரம் கிளை புதிய எண்.116, பழைய எண்.130, பாரதிமாதா தெரு, கிழக்கு தாம்பரம், காஞ்சிபுரம் - 600059 மின்னஞ்சல்: thameem@cityunionbank.in செல் எண்கள்: 8925564907, 8925564901
திரண்டிக்கப்பட்ட விலை	ரூ.48,00,000/- (ரூபாய் நாற்பது லட்ச மட்டும்)
திரண்டிக்கப்பட்ட விலையில் 10% பிணை வைப்புத் தொகை	ரூ.4,80,000/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)
ஏல உயர்வுத் தொகை	ரூ.25,000/- (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)
மின் ஏல இணையதளம்	www.auctionbazaar.com

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்து
திரு.A.கேசவன், த/பெ.திரு.அல்லிராஜ்பிரசன்ன அவர்களுக்கு சொந்தமான சொத்து

தென்சென்னை பதிவு மாவட்டம், கூடுவாஞ்சேரி சார் பதிவாளர் அலுவலகம், கிளாம்பாக்கம் கிராமம் - பாரதிநகர் தெரு, பழைய சர்வே எண்.349/1 (பகுதி) பட்டா எண்.412-ன் படி புதிய சர்வே எண்.219/1ல் இருந்து உட்பட 2204 சதுரடி அதாவது 204.75 சதுர மீட்டர் பரப்பளவு நிலம், கட்டிடம் மற்றும் இதனுடன் இணைந்த அனைத்து தூண்டுகளும் பகுதிகளும் அளவீடு தென்கிழக்கு மேல்புறம் 10.5 மீட்டர் கீழ்புறம் 10.5 மீட்டர் கிழக்கு தென்புறம் 19.5 மீட்டர் வடபுறம் 19.5 மீட்டர் ஆக மொத்தம் 2204 சதுரடி அதாவது 204.75 சதுர மீட்டர் பரப்பளவு இடம், கட்டிடம் உட்பட. நான்கு எல்லைகள்: மேற்கில் - பாரதிநகர் தெரு, கிழக்கில் - அல்லிராஜ்பிரசன்னத்து மீதமுள்ள நிலங்கள், வடக்கில் - 6 அடி பாதை, தெற்கில் - 9 அடி பாதை.

விலங்கம்: இல்லை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, எங்களது வங்கியின் www.cityunionbank.bank.in இணையதளத்தை பார்க்கவும்

இடம் : கும்பகோணம், தேதி : 28.07.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, 151, கிழக்கு மாடி தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN : L65110TN1904PLC000287, போன்: 0435 - 2402322, கம்பேக்ஸ் : 0435 - 2431746, இணையதளம் : www.cityunionbank.com

SBI பாரத ஸ்டேட் வங்கி ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
2வது தளம், செஞ்சிலுவைக் கட்டிடம், # 32, செஞ்சிலுவைச் சாலை, எழும்பூர், சென்னை 600008
Ph: 044-28881037. E-mail: sbi.05170@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரம்: திரு. J.S.R.L. சுவாமி, கைபேசி: 7810068331 தொலைபேசி: 044-28881058
நகர வழக்கு அதிகாரியின் பெயர் : திரு. R. கணபதி சுப்ரமணியன் கைபேசி: 9486961972 - தொலைபேசி: 044-28881056

அசையா சொத்தின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 9(1) ஏழாதுகூட்டி படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான பின்வரு விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கு பொதுவாகவும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டிருக்கும் அசையா சொத்துகளை அதிகாரபூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி அவர்களால் மெய்நிகர் வசதியுடன் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்தினை, கீழ்க்காணும் கடன் பாக்கிகளை வசூலிப்பதற்காக "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் 24.08.2026 அன்று விற்கப்பட உள்ளது. 14.07.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான ரூ.70,24,951/ (ரூபாய் எழுபது லட்சத்து இருபத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்று மட்டும்) மற்றும் அதனுடன் எதிர்கால வட்டி, இடைநிகழ் செலவுகள் மற்றும் அனைத்து இதர செலவினங்கள் சேர்த்து பாரத ஸ்டேட் வங்கி, சென்னை SARB-க்குச் செலுத்த வேண்டியுள்ளது.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : திரு. S. லட்சுமணன் (கடன்தாரர்) த/பெ சுப்ரமணியன் : குடியிருப்பு முகவரி 9/10, 2A, VJ பிளாட்ஸ், சுப்ரமணியன் அவென்யூ, திருவான்மியூர், சென்னை-600041 அலுவலக முகவரி : திரு. S. லட்சுமணன் (கடன்தாரர்) முதன்மை மேலாளர், Omega Healthcare management Private Limited எண்.33, NAL WIND Tunnel சாலை, முருகேசபாளையம், பெங்களூரு-560017 சொத்தின் முகவரி பிளாட் எண்.F2, 1வது தளம், பிளாக் 16 A, மனை எண், 16 A & 16 B, கணபதி நகர், காட்டுப்பாக்கம் கிராமம், சென்னை-600056.

சொத்தின் அட்டவணை: BANK PROPERTY ID : SBIN200057313707: அட்டவணை A. தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வருவாய் வட்டம், காட்டுப்பாக்கம் கிராமத்தின் சர்வே எண்.211, பட்டா எண்.1526, பட்டாவின் படி புதிய சர்வே எண்.211/9, இல் அடங்கிய சென்னை-8, CMDA உறுதியளி செயலாளரால் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வின்படி, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட உட்பிரிவு மனை (அங்கீகார எண் PPA No.37932/2014, கடிதம் எண் 508/2014/A3, நாள் 18.08.2014). கணபதி நகர் என பெயரிடப்பட்ட மனைப்பிரிவின் மனை எண்.16 இன் விஸ்தீரணம் 3898 சதுர அடி (முன்னைப்பிரிவு மனை எண்.16A இன் விஸ்தீரணம் 1900 சதுர அடி) வீட்டு மனை மற்றும் அதனை சார்ந்த அனைத்து தூண்டு மற்றும் பகுதி எல்லைகள் வடக்கில் திரு.விமலநாதன் அவரின் உரிமைப்பெற்ற மனை, தெற்கில் திருமதி.ஜெயலட்சுமி அவரின் உரிமைப்பெற்ற மனை, மேற்கில் மனை எண்.17, கிழக்கில் 24அடி தெரு, நாற்பாட்டுகள், கிழக்கு மேற்காக வடபுறம் 58.அடி 75அங்குலங்கள், கிழக்கு மேற்காக தென்புறம் 60 அடி 05 அங்குலங்கள், வடக்கு தெற்காக கிழக்குபுறம் 70 அடி 25 அங்குலங்கள், வடக்கு தெற்காக மேற்குபுறம் 60 அடி 05 அங்குலங்கள், இந்த சொத்தானது பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய யூனியன் எல்லைக்குள் அமைந்துள்ளது. அட்டவணை B. அட்டவணை A சொத்தில் முழுவதும் விவரிக்கப்பட்ட மொத்தநிலத்தின் 3898 சதுர அடியில் பிரிக்கபடாத பங்கு 318 சதுர அடி காலி நிலம் அட்டவணை C மேலே விவரிக்கப்பட்ட அட்டவணை A சொத்தில் நிலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பிளாக் 16A, முதல் தளத்தின் 998 சதுர அடி குடியிருப்பு பிளாட் எண், F-2, (பொதுபாய் உட்பட) ஒரு கார் நிறுத்துமிடம்.

குறைந்தபட்ச கேப்பு விலை ₹ 55,69,000/- | டேவணித் தொகை ₹ 5,56,900/- | ஏல உயர்வுத் தொகை ₹ 50,000/-

வங்கிக்குத் தெரிந்தவரை சொத்துக்களுக்கு வில்லங்கங்கள் ஏதுமில்லை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 12.08.2026 - நேரம்: காலை 11 முதல் பிற்பகல் 2 வரை

மின் ஏலத் தேதி & நேரம்: 24.08.2026 | நேரம்: காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை | (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

விருப்பமுள்ள ஏலதாரர்கள், BAANKNET.COM உடன் முன் ஏல டேவணித் தொகையை மின்னணு ஏல முடிவு வரை செலுத்தவும்.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com மற்றும் கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.sbi.bank.in என்ற இணைப்பில் காணவும்.

இடம்: சென்னை தேதி: 14.07.2026 அதிகாரப்பூர்வ அலுவலர், பாரத ஸ்டேட் வங்கி, SARB, சென்னை

pnb Housing

பதிவு அலுவலகம்: 9வது தளம், ஆர்த்திக் மால், 22, K.G. மார்க், புது தில்லி-110001. தொ.எ: 011-23357171, 23357172, 23705414, வலைதளம்: www.pnbhousing.com
கிளை அலுவலகம் : 3,அவுது தளம், 104/1, முத்துலிங்க செட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை - 600045.

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் பாகம் III, பிரிவு 13(2) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 3(1)-இன் கீழ் குறிப்பிட்ட நாள்படி திருத்தப்பட்ட அறிவிப்பு

PNB ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-ஆக நாங்கள் இதன் பின்னர் "PNBHFL" எனக் குறிப்பிடப்படும்) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் பாகம் III, பிரிவு 13(2)-இன் கீழ் (இதன் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) 3,அவுது தளம், 104/1, முத்துலிங்க செட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை - 600045. எனும் முகவரியில் அமைந்துள்ள எமது சென்னை அலுவலகத்திலிருந்து கோரிக்கை அறிவிப்பு அனுப்பியிருந்தோம். நிலுவையிலிருந்த நமனைகளை / வட்டியைச் செலுத்தத் தவறியதால், இந்திய ரிசர்வ் வங்கி / தேசிய ஹவுசிங் பாங்க் வழிகாட்டுதல்படி, உங்கள் கணக்குகள் செயல்படாச் சொத்துகள் என்று வகைப்படுத்தப்பட்டு, அதிகாரப்பூர்வ அலுவலரால் கடன்தாரர்கள் / கூட்டுக்கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் அனைவருக்கும் அந்தக் கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதை அனைத்துப் அரசி, வட்டி முதலையல்லாத நிலை செலுத்தத் தவறியமை தொடர்பானவையாகும். நிலுவையிலுள்ள தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நீங்கள் கோரிக்கை அறிவிப்பை வாங்குவதிலிருந்து நழுவி வருகிறீர்கள் என்பதைத் தக்க காரணங்களுடன் நாங்கள் நம்பவும், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(2)-இன்படி இந்தக் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுகிறது. இந்தக் கோரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதனுடன் நாளது வரையிலான வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றையும் PNBHFL-க்குச் செலுத்தாது இதன் மூலம் நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால் கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோர் ஈடு வைத்துள்ள சொத்துக்களில் ஏதாவது ஒன்றின் மீதோ அல்லது ஒன்றுக்கு மேற